**சார்பு நீதிமன்றம், மேலூர்**

நாள் :05.08.2024

வா.சா.1 – திரு.ராஜசேகர்

O.S No.336/2022

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

என் தகப்பனார் பெயர் மகாலிங்கம். மகாலிங்கத்தின் உடன்பிறந்த சகோதரர்கள் கண்ணன், பாலன், சுப்பிரமணியன் என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ணன் 3ம் பிரதிவாதி, பாலன் 6ம் பிரதிவாதி என்றால் சரிதான். என்னுடைய பெரியப்பா சுப்பிரமணியன் 03.05.2010ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். என் பெரியப்பா மகன் ரவி இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். என் பெரியப்பா சுப்பிரமணியனின் மகள்கள் விஜயலெட்சுமி, சிவயோகம்,அழகுமீனாள் என்றால் சரிதான். மேற்படி 3 சகோதரிகளையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் தாத்தா அழகுகோனார் 1975ம்ஆண்டு காலமாகிவிட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கின் 3ம் பிரதிவாதியான கண்ணன் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். அதை 2 மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகளான தெய்வேந்திரன், செல்வக்குமார், இந்திரா மற்றும் பாலன் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் வெள்ளலூர் கிராமத்தின் மொத்தம் 65 இலக்க சொத்துக்களை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்

என்றால் சரிதான். மொத்த சொத்துவிபரத்தை குறிப்பிட்டுள்ளார். அதில் குறிப்பிட்டுள்ள 1 முதல் 53 இலக்க சொத்துக்களை என் அப்பாவின் அப்பாவான அழகுகோனார் இறக்கும் போது விட்டுவிட்டு சென்றார் என்றால் சரிதான். 1 முதல் 53 இலக்க சொத்துக்களை பொருத்தவரை 1973ம் வருடம் பாகம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பாதி சொத்துக்களை பொருத்தவரை பாகம் ஏற்பட்டுள்ளது. மீதி சொத்துகளை பொருத்தவரை பாகம் பிரிக்கப்படவில்லை. என் அப்பத்தா காலத்திற்கு பின்னால் பிரித்து எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறிவிட்டார். 7 இலக்க சொத்துக்களை பொருத்தவரை பாகம் பிரிக்கப்படவில்லை. சர்வே நம்பர் ஞாபகமில்லை. மேற்படி சொத்துக்கள் வரிசை எண் 1 முதல் 16 இலக்கம் சொத்துக்களை என் தந்தை மகாலிங்கம் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள 17 முதல் 32 இலக்க சொத்துக்கள் என் பெரியப்பா சுப்பிரமணியன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அது அவர்களுக்கு தான் தெரியும். அதேபோல் 33 முதல் 47 இலக்க சொத்துக்கள் என் சித்தப்பா கண்ணன் மற்றும் பாலனின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அது அவர்களுக்கு தான் தெரியும். அவ்வாறு பாகபிரிவினை செய்யும் போது, கண்ணன் மற்றும் பாலன் ஆகியோர் சிறிய பிள்ளைகள் என்றும், கண்ணனுக்கு 13 வயது என்றும், பாலனுக்கு 11 வயது

என்றால் சரிதான் என்று சாட்சி சொல்லிவிட்டு, அதை பற்றி தனக்கு தெரியாது என்று சாட்சி மறுக்கிறார். ஆகவே, 33 முதல் 47 இலக்க சொத்துக்களை இளவர் என்பதால் 3 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்கு அவரது தாயாரான மருதாயிஅம்மாளை காப்பாளாராக நியமித்து பாகம் கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. ஆகவே, 33 முதல் 47 இலக்க சொத்துக்களை கண்ணன் மற்றும் பாலனின் காப்பாளர் என்ற முறையில் அவரது தாயாரான மருதாயிஅம்மாளை பெயருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அழகுகோனார் அவர்களுடைய பெண்மக்களான மீனாள் என்ற மீனாட்சிக்கு 48 மற்றும் 49 இலக்க சொத்துக்களும், லட்சுமி அவர்களுக்கு 50 மற்றும் 51 இலக்க சொத்துக்களும் இந்திரா அவர்களுக்கு 52 மற்றும் 53 இலக்க சொத்துக்கள் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனாருக்கு பூர்விக பாத்தியபட்டு அவரது பாகத்தில் ஒதுக்கப்பட்ட 2,3,4 இலக்க எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சர்வே நம்பர் 542/3A3B, 542/3A3C மற்றும் 542/3AB சொத்துக்களை மன்றமலைப்பட்டியை சேர்ந்த பாண்டியம்மாள் என்பவருக்கு விற்பனை செய்துள்ளேன் என்றால் சரிதான். என் அப்பா சர்வே நம்பர் 652/1, 654/7A மற்றும் 654/7C எதிர்வழக்குரையில் 6,7, 8ம் இன சொத்துக்களை காந்தி மனைவி சுந்தரி என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். அவருடைய சொத்தை தான்

விற்பனை செய்துள்ளார். நானும், என் சகோதரி 2ம் வாதியான ராதாவும் சேர்ந்து எதிர்வழக்குரையில் 12, 13, 14, 15 இலக்க சொத்துக்களான சர்வே நம்பர் 498/10, 498/11, 499/8, 499/9 இலக்க சொத்துக்களை ஒத்தப்பட்டியை சேர்ந்த சின்னையா மகன் இளங்கண்ணனுக்கு விற்பனை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பாலனும், கண்ணனும் தான் விற்பனை செய்துள்ளார்கள். நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றும், அவ்வாறு பாலனும், கண்ணனும் விற்பனை செய்யவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் நானும், என் சகோதரி 2ம் வாதியான ராதாவும் சேர்ந்து எதிர்வழக்குரையில் 16 இலக்க சொத்துக்களான சர்வே நம்பர் 258/1 சொத்துக்களை ஒத்தப்பட்டியை சேர்ந்த மாணிக்கம் மகன் மூவேந்திரனுக்கு விற்பனை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் கண்டுள்ள 1 முதல் 16 இலக்க சொத்துக்களை நாங்கள் விற்பனை செய்தது போக 1, 5, 10, 11 இலக்க சொத்துக்கள் மட்டுமே தற்சமயம் இருக்கிறது என்றால் சரியல்ல. தற்சமயம் எங்களிடம் எஞ்சியிருப்பது 1 ஏக்கருக்கும் குறைவாகவே பாகபிரிவினை செய்யாமல் என் அப்பத்தா பெயரில் உள்ளது. என் அப்பத்தா மருதாயி பெயரில் இருப்பது கண்ணன் மற்றும் பாலனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றும் அது எங்களுக்குரிய கூட்டுக்குடும்ப சொத்து அல்ல என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் கண்ட 65 வது இலக்க சொத்தான

**சர்வே நம்பர் 365/1 நான் கிரையம் செய்த பணத்தை கொண்டு வாங்கி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.**

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்.M.சாமுண்டீஸ்வரி பிரபா
சார்பு நீதிபதி,
மேலூர்